முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி

O.S.No. 335/2016

தேதி : 03-07-2025

(வா.சா.1) – திருமதி. கலையரசி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு 1, 4 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

1, 4 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

சசிரேகா என் மகள் என்றால் சரிதான். இந்த வழக்கில் என் மகள் 2ம் வாதியாக உள்ளார் என்றால் சரிதான். என் மகளுக்கு தாவா சொத்தில் உரிமையுள்ளது என்றால் அதைபற்றி எனக்கு தெரியாது, ஆனால் நானும், என் மகளும் தாவா சொத்தில் குடியிருக்கிறோம். இவ்வழக்கு தாக்கல் செய்யும்போது நானும், என் மகன் வேல்முருகனும் சேர்ந்து சசிரேகா என்பவருக்கு ஈடுகடன் எழுதிக்கொடுத்த விசயத்தை ஏன் சொல்லவில்லை என்றால் அப்போது அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி ஈடுகடன் பத்திரத்தை வைத்து என்னுடைய மகள் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் OS 88/2024 என்ற வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். 10.06.2016 மாரியம்மாள் என்பவர் இறந்துவிட்டார் என்றால் சரிதான். வா.சா.ஆ.12 மேற்படி மாரியம்மாள் உயிரோடு இருக்கும்போது எழுதப்பட்டதா அல்லது காலமானபின்னர் எழுதப்பட்டதா என்றால் இறந்தபின்னர் எழுதப்பட்டது. தாவா சொத்துக்களில் எனக்கும், என் மகனுக்கும் உரிமையில்லை என்றால் சரியல்ல. நானும், என் மகனும் சேர்ந்து கொண்டு உண்மைக்கு மாறாக வா.சா.ஆ.12 போலியாக உற்பத்தி செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வழக்கிற்காக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஓம்.K.ரேணுகாதேவி,
முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.